**கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கம்பனிகள் நிதியம் - 2013**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கம்பனிகள் நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் இறுதிக் கணக்குகளுக்கு உரித்தான குறிப்புகள் மற்றும் ஏனைய ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 479(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கம்பனிகள் நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றுக்களின் பிரகாரம் முதலீடாக ரூபா 90,275,000 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய முதலீட்டுக் கம்பனி முறிவடைந்திருந்தமையால் பாதிப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதுமான அளவு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைகள்**

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 395(இ) பந்தி | வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 05 வங்கிக் கணக்குகளுக்கு உரித்தாக இதன் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 94 (1) | ஏற்பாடுகள் இன்றியும் முன்னங்கீகாரம் இன்றியும் கட்டிடங்களும் பொருத்துக்களும் மேம்படுத்தப்படுவதற்காக ரூபா 485,006 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக நிதியச் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் ஏற்பட்ட நிதி விளைவு ரூபா 351,550,815 மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 287,126,146 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மிகை ரூபா 64,424,669 ஆல் அதாவது 22 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இவ் அதிகரிப்பிற்காக மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் அறவிடப்பட்ட கட்டணத்தை அதிகரித்தமை விசேடமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

நிதி விளைவுகளின் மிகை அதிகரிப்பது தொடர்பாக பின்வரும் விடயங்கள் தாக்கமளித்திருந்தன.

**வருமானம்**

| விபரம் | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு | மிகை நிதி | முன்னைய ஆண்டினை விட வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| **வருமானம்** | | | | |
| கோவைகள் பரீட்சிக்கப்படல் | 5,423,500 | 2,546,620 | 2,876,800 | 112.97 |
| பெயர்களை அங்கீகரித்தல் | 12,075,000 | 7,097,000 | 4,978,000 | 70.14 |
| மாதிரிப் படிவம் பதிவுசெய்தல் | 111,545,649 | 41,273,300 | 70,272,349 | 170.26 |
| ஆண்டறிக்கை பதிவுசெய்தல் | 149,265,000 | 101,206,500 | 48,058,500 | 47.48 |
| நிதியறிக்கை பதிவுசெய்தல் | 2,867,000 | 1,480,000 | 1,387,000 | 93.72 |
| செயலாளர்கள் பதிவுசெய்தல் | 1,140,000 | 1,005,500 | 134,500 | 13.38 |

2013 சனவரி 01 ஆம் திகதி முதல் மேற்குறித்த செயற்பாடுகளுக்காக அறவிடப்பட்ட கட்டணம் மீட்கப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சகல வருமானங்களும் அதிகரித்திருந்த போதிலும் உள்ளபடியான செயலாற்றலில் பௌதீக அதிகரிப்பு அவதானிக்கப்படவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்தின் பௌதீக செயலாற்றலில் வீழ்ச்சி பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

| செயற்பாடு | எண்ணிக்கை | | வேறுபாட்டின் குறைவு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | | |
| கம்பனிகள் பதிவு பதிவுசெய்தல் | 6,047 | 7,089 | (1,042) | (17) |
| கோவைகளைப் பரிசோதித்தல் | 10,847 | 12,729 | (1,882) | (15) |
| பெயர்களை அங்கீகரித்தல் | 12,075 | 14,194 | (2,119) | (15) |
| பிரதிகள் சான்றுறுதிப்படுத்தல் | 36,531 | 38,459 | (1,928) | (5) |
| மாதிரிப்படிவங்களை பதிவு செய்தல் | 70,659 | 74,304 | (3,992) | (12) |
| ஆண்டறிக்கை பதிவு செய்தல் | 29,853 | 33,845 | (3,992) | (12) |
| நிதி அறிக்கையை பதிவு செய்தல் | 2,867 | 2,959 | (92) | (3) |
| மாதிரிப் படிவ விற்பனை | 4,207 | 4,368 | (161) | (4) |
| செயலாளர்களைப் பதிவு செய்தல் | 437 | 622 | (185) | (30) |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கைப் பதிவு 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 3,992 ஆல் அதாவது 12 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும் வருமானம் ரூபா 101 மில்லியன் முதல் ரூபா 149 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. இவ்வாறே ஏனைய சகல செயற்பாடுகளினதும் முன்னேற்றம் பௌதீக ரீதியாகக் குறைவடைந்திருந்த போதிலும் வருமானம் அதிகரித்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பதிவாகியிருந்த வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 62,508 ஆகக் காணப்பட்டதுடன் அத்தினத்தில் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 52,990 ஆகக் காணப்பட்டது. எவ்வாறெனினும் அன்றைய தினத்தில் ஆண்டறிக்கை சமர்ப்பித்திருந்த வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 14,084 ஆகக் காணப்பட்டமையால் ஆண்டறிக்கை சமர்ப்பித்திராத வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 38,906 ஆகக் காணப்பட்டதுடன் அன்றைய தினத்தில் அறவிடப்பட்டிராத நிலுவையான ஆண்டறிக்கை பதிவுசெய்தல் வருமானம் ரூபா 64,843,333 ஆகக் காணப்பட்டது.

### (ஆ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வரையறுக்கப்பட்ட கம்பனிகள் ஒழுங்குபடுத்தல்

கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள நியதிச்சட்ட செயற்பாடுகளான பதிவு செய்யப்பட்ட

கம்பனிகளது நடவடிக்கைகளின் ஒழுங்குபடுத்தல் மிகவும் நலிவான நிலையில் காணப்படுவதுடன் ஒழுங்குபடுத்தலுக்காக செயற்பாட்டு ரீதியான செயல்நடவடிக்கைகள் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திடம் இருக்கவில்லை. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள், கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாதிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(ii) வரையறுக்கப்பட்ட கம்பனிகள் கணக்காய்வாளர்களைப் பதிவுசெய்தலும் பதிவுகளை புதுப்பித்தலும்

மீளாய்வாண்டின் போது 74 புதிய கணக்காய்வாளர்கள் புதிதாகப் பதிவாகியிருந்ததுடன் இதன் மூலமான வருமானம் ரூபா 9,990 ஆகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் போது புதிதாகப் பதிவாகிய 84 பேரிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 11,340 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானம் 12 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது பதிவாகியிருந்த கணக்காய்வாளர்களின் புதுப்பிப்பு 556 ஆகக் காணப்பட்டதுடன் வருமானம் ரூபா 12,232 ஆகக் காணப்பட்டது. கடந்த ஆண்டின் போது அந்த எண்ணிக்கை 444 ஆகக் காணப்பட்டதுடன் கிடைத்த வருமானம் ரூபா 9,768 ஆகக் காணப்பட்டமையால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானம் 25 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும் கணக்காய்வாளர்களை அறிவூட்டுதல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) 1891 இன் 16 ஆம் இலக்க சங்கக் கட்டளைச் சட்டம்**

மீளாய்வாண்டின் போது சங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 169 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் சங்கங்களைப் பதிவுசெய்வதன் மூலம் பெறப்பட்ட முத்திரை வருமானம் ரூபா 4,225 ஆகக் காணப்பட்டது. 2010 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கையில் தொடர்ச்சியான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது இது 75 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

**(ஈ) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச்சட்டம்**

பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 5 மில்லியனுக்கு மேற்படும் சகல ஒப்பந்தங்களும் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த பொது ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 4,251 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் போது இது 4,414 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது பதிவு செய்யப்பட்ட பொது ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 4 சதவீத குறைவைக் காண்பித்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீள்வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட கம்பனிகள் பதிவு செய்யும் செயற்பாடு கணனி மயமாக்கும் செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 140 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அம் மொத்த ஏற்பாட்டுத் தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அச் செயற்திட்டத்திற்காக நிர்வாகச் செலவினமாக மேலும் ரூபா 2,800,000 தொகையான மேலதிக ஏற்பாட்டுத்தொகை பெறப்பட்டு இதில் ரூபா 1,086,000 தொகை கணனி மற்றும் உரிய மென்பொருள் கொள்வனவிற்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அவ் ஏற்பாட்டில் குறை பயன்பாட்டுத்தொகை 61 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) திணைக்களத்தின் கட்டிடம் அமைந்துள்ள காணி, போக்குவரத்து அமைச்சின் இணக்கத்துடன் கம்பனிகள் பதிவாளருக்கு கையேற்கப்படுவதற்கு 2007 செப்டெம்பர் 12 ஆந் திகதிய 07/1616/342/020 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மேலும் இதற்காக 2012 யூன் மாதம் 26 ஆம் திகதி ரூபா 35,510,750 தொகை புகையிரதத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இக் காணி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதியத்தின் பாதீட்டு மதிப்பீட்டின் படி கட்டிட நவீனமயமாக்கலுக்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 8 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 1.11 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தமையால் ரூபா 6.89 மில்லியன் அதாவது 86 சதவீதம் எஞ்சியிருந்தது. இதன் படி, நிறுவகத்தின் நவீனமயமாக்கல் செயற்பாடு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2013 ஆம் ஆண்டின் போது நிதியத்தின் பாதீட்டின் மூலம் பயிற்சியளிப்பு மற்றும் இயலுமை விருத்திக்காக ரூபா 0.4 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 0.12 மில்லியன் அதாவது 30 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. இதன் படி பயிற்சியளிப்பு மற்றும் இயலுமை விருத்தி நடவடிக்கைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் உத்தியோகத்தர்களின் பயிற்சியளிப்பு மற்றும் இயலுமை விருத்திக்கான முறையான நடவடிக்கைகளும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2007 ஆம் ஆண்டில் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் பணியையும் செயல் நடவடிக்கைகளையும் மேற்கொள்கையில் கம்பனிப் பதிவாளரால் ஏற்கப்படும் சகல செலவினங்களும் நிதியத்தால் ஏற்கப்படக்கூடிய போதிலும் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் உப பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தின் கீழ் உட்படாத, வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிக்கு உரித்தான பங்குக் கொள்வனவிற்காக ரூபா 90,275,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இப் பங்குகளின் உரிமை கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சிற்கு உரியனவாக இருந்ததுடன் உரிய கம்பனி முறிவடைந்திருந்தமையால் இதனை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது வரை இம் முதலீட்டிலிருந்து எவ்வித நலனும் கம்பனி நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**4.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கம்பனிகள் நிதியத்தின் வங்கிக் கணக்கில் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 13 மில்லியன் தொகையான சராசரிக் காசு மீதி நித்தமும் நிலவியதுடன் அக் காசு மீதியை ஆக்கபூர்வமாக முதலீடு செய்திராமையால் கம்பனி நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாகக் காணப்பட்ட வட்டி வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

**4.5 பதவியணி முகாமைத்துவம்**

கம்பனி நிதியத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்தும் கம்பனிப் பதிவாளர் நாயகம் அடங்கலாக 03 மேல் மட்டப் பதவிகள் உள்ளடங்கலாக 30 பதவிகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிட நிலையில் காணப்பட்டது. இந் நிலை கம்பனி நிதியத்தின் நடவடிக்கைகளின் செயற்பாடு மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை அமுலாக்குவதில் பாதகமான விளைவை ஏற்படுத்தக்கூடும் என்பது கணக்காய்வின் போது தவிர்க்கப்பட முடியாததாகியுள்ளது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2013 ஆம் ஆண்டிற்கு உரித்தாகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிதியத்தால் தனது நோக்கத்தை எய்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயற்பாடுகளினதும் தன்மையும் அவற்றிற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களும் பிரிவு தொடர்பாக வெவ்வேறாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி கணக்காய்வின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிதியத்தின் செயலாற்றலை மதிப்பிடுவது சிரமமாகக் காணப்பட்டது.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்.ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் படி போதிய உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும், உள்ளபடியான வருமானச் செலவினத்திற்கும் இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு நலிவுகள் அவ்வப்போது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கம்பனிகள் ஆண்டறிகைகளைப் பதிவுசெய்தல்/ ஒழுங்குபடுத்தல்
(இ) கொள்வனவு
(ஈ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(உ) மனிதவள முகாமைத்துவம்